**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130-2025**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 28.07.2025**

| Name : சேகர் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை-**

1. கடந்த 02.02.2025ம் தேதியன்று நான் இந்த வழக்கின் புகார்தாரர் மதியழகன் என்பவரை விசாரித்த தினதன்று மாலை 3.30 மணிக்கு 1ம் எதிரி தங்கவேலு என்பவரை விசாரித்து வாக்குமுலம் பெற்றேனா என்றால் ஆமாம். அந்த வாக்குமுலம் எ.த.ச ஆ ஆகும். வாக்குமுலம் வாங்கும் போது மதியழகன் நல்ல மனநிலையில் இருந்தாரா என்றால் ஆமாம்.

2. வாக்குமுலம் வாங்கும் போது சம்பவம் எந்த இடத்தில் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் வீட்டிற்கு நடந்ததாக கூறியுள்ளார். எதிரி தங்கவேல் எந்த இடத்தில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டள்ளார் என்றால் வீட்டிற்கு வெளியே சுவற்றில் மோதியதால் காயம் அடைந்ததாக சொல்லபடும் இடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். சம்பவம் நடந்தது வீட்டிற்கு வெளியே அல்லது உள்ளே என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வீட்டில் நடந்ததாக சொல்லியுள்ளார்.

3). வாக்குமுலம் குழந்தை நல அலுவலர் நான்கு நாட்கள் முன்பாக விசாரித்தாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். நான் காவல் நிலையத்தில் இருந்து எனது காவல் நிலையத்தில் யாரும் செல்லவில்லை என்றால் ஆமாம். அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் இருந்த சென்றார்கள். குணவதி எப்படி இறந்தார்

என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. அ.சா.1 ஐ வீட்டிற்கு வெளியே இழுத்து தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. நேரடி சாட்சிகள் பார்த்ததாக கேட்டால் இல்லை. கலைக்கொல்லி மருந்தை குடித்து குணவதி இறந்ததாக என்னிடம் கொடுத்த புகாரில் சொல்லவில்லை என்றால் இல்லை. கையால் அடித்ததாகத்தான் சொல்லியுள்ளார். அதை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்கள் என்றால் ஆமாம். தலைமேல் அடித்ததாக எதுவும் புகாரில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. யமுனாவை மதியழகன் இடுப்பி எட்டி ஒதைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் இல்லை. சாருலதாவை யமுனா முடியை பிடித்து சுவற்றில் தள்ளியதாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். இரண்டு சம்பவமும் ஒரே நேரத்தில் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். எதிரி தாக்கிய நேரம் மாலை 4 மணி என்றால் ஆமாம்.எதிரி தங்கவேல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் ஆமாம். என்ன ஆயுதம் கொண்டு தாக்கியதாக குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் ஆமாம். மதியழகன் மற்றும் தங்கவேல் ஆகியோர்கள் 02.02.2025ம் நாள் மருத்துவமனையில் சேர்ந்தார்கள் என்றால் எனக்கு நினைவில்லை. சம்பவம் இடம் மதியழகன் சொன்னவாறு கரட்டுபட்டி, பனங்காடு, ரோஸ்கார்டன். மதியழகன் வகையறா 108 ஆம்புலன்ஸ் மூலம் தங்கவேல் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சென்றார். 03.02.2025 ம் தேதி மாலை 7 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சீனிவாசனிடம் கொடுத்தேன் என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் மதியழகன் எந்த வாக்குமூலமும் மருத்துவமனையில் என்னிடம் கொடுக்கவில்லை என்றும், எனது மேல் அதிகாரி காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக ஒரு வாக்குமூலத்தை எழுதி தயாரித்து காவல் உதவி ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன் என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.